ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2136/3 - 2019 ජූනි මස 13 වැනි අඟහරුවාදා - 2019.08.13
*2136/3 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09 ஆந் திகதிய 1983/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 215 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : 4-3/7/2016/எச்டபிள்யூ/119.
பிரதேச செயலாளரின் இல. : 3/3/22-1/2019.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர", இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019, யூன் 18.

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவில், ரேகோபத்து கோறளே சிறு பிரிவில், இல. 854, கொடவிட்ட கிராம அலுவலர் பிரிவில், பம்பரகஹபெலெஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. இ.கி.வ. 1491 ஐ கொண்ட ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

1. **துண்டு இல. 151 - ஹிட்டினாவத்தை, பாலுவத்தை அல்லது மீகஹமுலவத்தை - விஸ்தீரணம் : 0.0333 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 158 மற்றும் 145 ; கிழக்கு : துண்டு இல. 150 மற்றும் 19 ; தெற்கு : துண்டு இல. 19, 34 மற்றும் 152 ; மேற்கு : துண்டு இல. 152, 157 மற்றும் 158.

08 - 962